1978 செப்டம்பர் 14]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, அன்றையதினம் அங்கே விவசாயிகள் மூன்று, நான்கு மாட்டு வண்டிகளில் வந்த பொழுது இரண்டு மாட்டு வண்டிகள் நொறுங்கியிருக்கின்றன, இரண்டு மாடுகள் செத்திருக்கின்றன. அவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழக மேனேஜிங் டைரக்டருக்கு வக்கீல் நோட்டிஸ் கொடுத்திருக்கிறார்கள். நான் இரண்டு முறை பார்த்து, நஷ்டஈடு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனல் மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படிச் சொல்கிறார்கள். விபத்துக்குள்ளானவர்களின் மாட்டு வண்டிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, அவர்கள் ஏழை எளியவர்கள், எனவே அதற்குத் தகுந்த நஷ்டயீட்டைத் தருவதற்கு நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த விபத்திலே நான் உயிர்ச்சேதம் இல்லையென்று கூறினேன். ஆனல் மாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதுபற்றிய குறிப்பு எனக்குத் தரப்படவில்லை. ஆனல் இந்த விபத்திலே, லாரி ஒன்று பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்திலே மோதிய காரணத்தாலேதான் விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும், புலனாய்வில் லாரிதான் அதற்குக் காரணம் என்றும் லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டு வழக்கு நடந்திருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து அந்த விபத்துக்குக் காரணமாக இருந்தால்தான் விதிமுறைப்படி நட்டஈடு கொடுக்க முடியும். அதுபற்றி, விவரம் தெரிந்து நடவடிக்கை எடுக்கிறேன்.

பீடித் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி.

*வினு எண் 208—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு P. F. பிடிக்கும் சட்டம் கொண்டுவர அரசு ஆலோசித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாட்டிலுள்ள பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்புத் தொகை பிடிக்கும் சட்டம் 31—5—1977 முதல் கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS